## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

------------

## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT No.I, PERAMBALUR

| | | |
|---|---|---|
| Case Number | : | C.C.No. 243/2022 |
| Prosecution Witness | : | அ.சா.9 |
| Name | : | பட்டு (Child Line member) |
| Husband Name | : | பழனிச்சாமி |
| Address | : | செங்குணம், அண்ணா நகர், பெரம்பலூர் மாவட்டம். |
| Age | : | 42/2025 |

**<u>தேதி : 12.06.2025</u>**

சாட்சிக்கு நீதிமன்ற உதவியாளர் திரு.S. தினேஷ் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டது.

**<u>முதல் விசாரணை</u>**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் பெரம்பலூர் குழந்தைகள் நல பாதுகாப்பில் Team Member ஆக பணியாற்றி வருகிறேன். 2020ம் ஆண்டு ஜூன் மாதம் தேதி ஞாபகமில்லை, ஒருநாள் 1098 எண்ணிற்கு ஒருஅழைப்பு வந்தது. இரண்டு குழந்தை தொழிலாளர்கள் பொம்மனாப்பாடி கிராமத்தில் ஆடு மேய்ப்பதாக அழைப்பு வந்தது. அப்போது நானும், சத்தியராஜ் என்ற Team Memberம் அலுவலகத்திலிருந்து பொம்மனாப்பாடி கிராமத்திற்கு சென்றோம். பொம்மனப்பாடி கிராமத்திற்கு சென்று பார்த்தபோது இரண்டு சிறுவர்கள் ஆடு மேய்த்து கொண்டிருந்தார்கள். அவர்களை விசாரித்தபோது ஒரு சிறுவன் பெயர் மதி, மற்றொரு சிறுவனின் பெயர் முருகன் என்று சொன்னார்கள். ஒருவர் திருச்சி என்றும், மற்றொருவன் இராமநாதபுரத்தை சேர்ந்தவர் என்றும் சொன்னார்கள்.

அங்கிருந்து புறப்பட்டு வந்து குழந்தை தொழிலாளர் துறையிடமும், எங்களுடைய அலுவலக ஒருங்கிணைப்பாளர் மற்றும் இயக்குநர் அவர்களுக்கும் தகவல் சொன்னோம். பொம்மனப்பாடி கிராமத்தில் உள்ள கிராம நிர்வாக அலுவலருக்கு தகவல் சொன்னோம். அன்றைய தினமே ஒருங்கிணைப்பாளர் திவ்யா, இயக்குநர் முகமது உசைன், தொழிலாளர் நல அலுவலர் சாந்தி மற்றும் பாஸ்கர், வி.ஏ.ஓ. ஆகியோர்கள் பொம்மனாப்பாடி கிராமத்திற்கு சென்று சிறுவர்களை மீட்டு வந்தார்கள். சிறுவர்களை கண்ணன் என்பவர் அழைத்துவந்ததாக சொன்னார்கள். கிராம நிர்வாக அலுவலர் சசிகலாஎன்பவர் இதுசம்மந்தமாக புகார்கொடுத்தார். போலீஸார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

திவ்யாவிற்கு நான் காலை போன் செய்தேன். சம்பவ இடத்திற்கு நானும், சத்தியராஜ் என்பவரும் சென்றோம். சிறுவர்களை ஆடு மேய்த்துக்கொண்டிருப்பதை பார்த்தோம். மேற்படி வெள்ளாடுகள் 50க்கும் மேல் இருக்கும். ஆடு மேய்த்துக்கொண்டிருந்த இடத்திற்கு அருகே ஓடு வீடுகள், ஆஸ்பட்டாஸ் வீடுகள், ஆட்டுப்பட்டிகள் இருந்தது. அந்த இடத்தை தொழிலாளர் நல துறையினர் சொல்லி போட்டோ எடுத்தார்கள். போட்டோ எடுத்த விவரத்தை போலீஸார் விசாரணையில் சொல்லியுள்ளேன். சம்பவ இடத்திலிருந்து கிளம்ப மாலை 5.30 மணிக்கு மேல் ஆகிவிட்டது. நான் சம்பவ இடத்திற்கு செல்லவில்லை என்றாலும், சிறுவர்கள் ஆடு மேய்த்துக்கொண்டிருக்கவில்லை என்றாலும் சரியல்ல. புள்ளி விவர கணக்கிற்காக போடப்பட்ட வழக்கிற்கு பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. போலீஸார் என்னை அந்த வாரத்திலேயே விசாரணை செய்தார்கள்.

Taken down by / before me in open court
read over / interpreted to the witness
in the presence of the accused / accused/
pleader and admitted by the witness to be
correct

Sd/-.
Judicial Magistrate No.1
Perambalur.